திரு **K.S. இராவணன்**
(10-06-2020)

மண்ணிலே வந்து தித்த
மாண்புறு நாளாம் இன்று!
புண்ணியம் செய்தே அன்பின்சீர்
புதல்வியால் நிறைந்த வாழ்வு!
கண்ணியம் சேர் நறும் பணியும்,
காலத்தால் நிறைவு கொள்ள,
எண்ணிய இன்பம் நிறைக்க,
எழுந்தனர் பெயர்த்தியரும்,

கொண்ட நல்உறவி னோடும்,
கூடிய நற்றமிழி னோடும்,
மன்னியநல் அன்பைக் கொண்டே,
மகிழ்வுடன் போற்றுவேனே!
நன்னிய வாழ்வின் மாட்சி,
நடத்திடும் அறிவின் கேள்வன்,
எண்ணிய இன்பம் யாவும்,
இயல்புடன் அளித்திடுவானே!
அன்புடன்,
கு.ப. அசோகன்.

**திருமிகு சந்தான ராமனுக்கு!**
**(14-08-2015)**

பைந்தமிழ்க்கவிதை போலும்;
பழகிய நட்பைப் போலும் ;
ஐந்திணை கண்ட தோர் நல்
அறிவுடை மாந்தர் போலும்;
தந்திரக் கனவுகள் இல்லா
தழைந்த நல் நட்பினோடும்;
விந்தைசேர் மக்களோடு
வியனுலகில் நீடு வாழ்க!



**பாமா சிவராமன் 04-01-2017**

பனிதூங்கும் நன்மலராய்;
பாங்குடனே பெற்றமகன்,
நனிசீரும்; நற்புகழும்;
நானிலத்தில் பெறுதல் கண்டு,
நற்பயனாம் வாழ்க்கை யென்றே,
என்னனாளும் பெருமை மேவ,
வாழ்ந்திடுக பாமா சிவராமனே!

**இரா. இராஜேந்திரன் (23-08-2020)**

மன்னிய வடக்காலத்தூர்
மருவிலா உறவின் கோமான் !
நன்னிய சீர் பிறந்தநாள் இன்று,
நலம்பட வாழ்க வென்று,
இன்னிய தமிழால் வாழ்த்துவேனே!
எந்நாளும் மகிழ்ந்தே யென்று!

**திரு பாபுகுமார் ஜேக்கப் (12-09-2019)**

மெத்தஓர் பெருமை கொண்டு,
மேதினியில் பிறந்து வந்தே,
வித்தகராய் விளையாட்டு தன்னில்,
வியப்புறும் சீர்மைப் பெற்று,
மத்திய அரசுப் பணி கொண்டார்!
மருவில்லா கீர்த்தி யோடு!
இத்தரையில் அவருதித்த நாளின்று;
வாழ்கவென வாழ்துவேனே

# இனிய பிறந்தநாள் வாழ்த்து!

திகழ்ந்த உறவும், முகிழ்ந்த உறவும்,
அண்ணன் என்றோர் நிலையைச் சொல்ல,
மகிழ்ந்த மனமோ ஓர் ஐம்பதாண்டு!
உளமும் நினைவுமாய், வளர்ந்த உறவு,
நெகிழ்ந்து கொள்ளும் எழுபது ஆண்டுகள்
இயைந்து கண்ட நிலையைக் கொண்டு!
பாடும் களமுமாய் பக்குவ மனமுமாய்
வாழ்வினைக் கொண்ட நிலையில்,
எழுபத்தியோராம் அகவை நிறையுமாம் இன்று!
**01-08-2021**

**வடகை சௌந்தர் 08-09-2020**

இனியதாய் அகவை அறுபது,
இன்றுடன் நிறைவு கொள்ள;
மணிவிழாக் காலம் என்றே,
மகிழுவுடன் கூறிக் கொள்ள;
தேனினும் இனிய மொழியாள்,
திகழ்ந்திடும் இல்லக் கிழத்தி!
வானின்று வாழ்த்துவர் பெற்றோர்,
வாழ்க நீ வடகை சௌந்தரே!